**ஹபராதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மாரச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 யூலை 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஹபராதுவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டின்போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் நன்கொடையாகப் பெறப்பட்ட ரூபா 1,480,000 கிரயமுடைய மோட்டார் வாகனங்களும் வண்டிகளும் மீளாய்வாண்டில் சொத்துக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக அவற்றின் பெறுமதி திரண்ட நிதியக்

(ஆ) மீளாய்வாண்டின் 04 வேலைகளுக்கெனப் பெறவேண்டிய ரூபா 2,096,998 தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடு தவறுதலாக மூலதனக் கடன்கொடுத்தோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடமிருந்து நன்கொடையாகப் பெறப்பட்ட 10 பலநோக்கு நடமாடும் கூடல்களது பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 22 ஊழியர்களிடமிருந்து 862 சம்பளமற்ற லீவு நாட்களுக்கு அறவிட வேண்டிய ரூபா 518,184 பெறவேண்டிய வருவாயாகக் கணக்கிலிடப்படவில்லை.

#### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்படும் ரூபா 34,884,412 கூட்டுத்தொகையுடைய 12 கணக்கீட்ட விடயங்களது மீதி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய எப பதிவேடுகளிலும் அறிக்கைகளிலும் காணப்படும் மீதி என்பற்றுக்கிடையே ரூபா 9,981,237 கூட்டுத்தொகையுடை வேறுபாடுகள் நிலவின.

### 1.3.4 தொங்கல் கணக்கு

பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் தொங்கற் கணக்கின் வரவு மீதி ரூபா 701,430 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 25,633 ஆகக் காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 601,430 வரவு மீதியாகியது. சரியான மீதியை இனங்கண்டு தேவையான சீராக்கலைச் செய்து அதனைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டவாறிருக்கும் 04 பெறவேண்டிய கணக்கு மீதிகளது கூட்டுத் தொகையாகிய ரூபா 1,307,358 தீர்த்து வைக்கப்படுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டவாறிக்கும் 03 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளது கூட்டுத்தொகையாகிய ரூபா 1,419,827 தீர்த்து வைக்கப்படுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

காணிகளும் கட்டிடங்களும், இயந்திர சாதனங்களும் உபகரணங்களும், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும், தளபாடங்களும் பொருத்திகளும் மற்றும் நூலகப் புத்தகங்கள் என்பவற்றினது ரூபா 89,222,289 கூட்டுத்தொகை உள்ளடக்கிய நாளதுவரையாக்கப்பட்டதும் சொத்துக்களின் தரங்களுக்கேற்பத் தயாரிக்கப்பட்டதுமான நிலையான சொத்துப் பதிவேடு, ரூபா 15,345,563 கூட்டுத் தொகையுடைய கடன்பட்டோர், கடன்கொடுத்தோர், வைப்புகள், நிலுவையாக உள்ள ஏனைய வருவாய், தற்காலிக ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய சம்பளம் என்பவற்றிற்குரிய முறையாகப் பேணப்படும் கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் பதிவேடுகள், காலப்பகுப்பாய்வு அறிக்கைகள் பட்டோலைகள் மற்றும் ரூபா 478,108 கூட்டுத்தொகையுடைய சாதாரண முற்பணங்களுக்குரிய பட்டோலைகள் போன்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வில் அவற்றைத் திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

கீழே விபரிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) | காலங்கடந்த ரூபா 1,131,733 கூட்டுத்தொகையுடைய 82 வைப்புக்கள் சம்பந்தமாகக் குறித்த நிதிப் பிரமாணப்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் அவை துரப்பிடித்தவாறிருந்தன. |

## 2. நிதிகள் மீளாய்வு

--------------------------

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

---------------------------------

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,224,786 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,275,342 ஆகும் இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 4,584,300 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வினூடாக நிதிசார் மீளாய்வு

-------------------------------------------------------------

(அ) நிரந்தரப் பதவியணியினரது சம்பளமும் படியும் மாத்திரமே உள்ளூராட்சி ஆணையாளரால் மீளளிப்புச் செய்யப்படுவதால் சபை ஆட்சேர்த்திருந்த ஊழியர்களது சம்பளத்தையும் படியையும் வழங்குவதற்குச் சபையின் வருவாயிலிருந்து ரூபா 5,156,462 செவலவிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிலைமையில் மொத்த மீண்டுவரும் செலவினத்தில் 9 சதவீதக் குறைவைக் காட்டியபோதும், மொத்த மீண்டுவரும் வருவாயின் 120 சதவீதம் வரையிலான அளவில் மொத்த மீண்டுவரும் செலவின உயர்வடைந்திருப்பதால் சபையின் நிதிக்கட்டுப்பாடு மீள நலிவுற்ற நிலையிலேயே காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டினதும் முன்னைய இரு ஆண்டுகளினதும் சபையினது வருவாய்க்கான உதவி, சுய உற்பத்தி வருவாய் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பன தொடர்பான பொழிப்பும் விபரமும் வருமாறு.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 67,404,283 | 44,694,940 | 22,709,343 | 81,094,826 | (58,385,483) |
| 2014 | 63,662,705 | 24,442,688 | 39,220,017 | 81,938,046 | (42,718,029) |
| 2013 | 117,970,380 | 18,091,944 | 99,878,436 | 61,788,484 | (38,089,952) |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கடந்த 2 ஆண்டகளிலும் சபையினது சுய உற்பத்தி வருவாய் அதிகரித்த போதும், மீளாய்வாண்டில் அது ரூபா 16,510,674 குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் வருவாய்க்கான உதவி அதிகரித்திருந்தது.

(ii) சபையினது மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எனினும், அந் நிலைமையை இனங்கண்டு செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்குக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

(iii) சபையினது சுய உற்பத்தி வருவாயிலும் கூடுதலாக முன்னைய ஆண்டில் ரூபா 42 மில்லியனுக்கு அதிகமான செலவினமும் 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 58 மில்லியனுக்கு அதிகமான செலவினமும் ஏற்பட்டிருந்தன. சபைக்குக் கிடைக்கப் பெற்ற வருவாய்க்கான உதவியைக் கருத்திற் கொண்டதையடுத்தும் சபையின் வருமானத்திலும் கூடிய செலவினம் ரூபா 18 மில்லியன் மற்றும் ரூபா 14 மில்லியன் ஆகவிருந்தது.

(iv) சபையினது வருவாயை அதிகரிப்பதற்கு விசேட கவனம் செலுத்த வேண்டுமெனவும், மீண்டுவரும் செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டு துரித நடவடிக்கைகளை அமுலாக்க வேண்டுமெனவும் அவ்வாறு செய்யாதுவிடின் சபையினது நிதி நிலைமையும் நிதிக் கட்டுப்பாடும் நலிவடைந்து தொடர்ந்து செயலாற்றுதல் சர்ச்சைக்குரியதாகிவிடும் என்பதும் கணக்காய்வினது கருத்தாகும்.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 தீர்வையும் வரியும்**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வையும் வரியும் ரூபா 9,784,334 ஆகும். இதில் 35 சதவீதமான ரூபா 3,414,952 அறவிடப்பட்டிருந்தது. தீர்வையும் நிலுவையாகியமை அதிகரித்திருந்தபோதும், அதனை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**2.3.2 ஏக்கர் வரி**

முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ரூபா 10,166 அறவிடப்பட வேண்டியிருந்தபோதும், ஆண்டின்போ ரூபா 863 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

2.3.3 குத்தகை வாடகை

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டினது முடிவில் உள்ளவாறு குத்தகை வாடகை நிலுவை ரூபா 397,142 ஆகியிருந்தது.

**2.3.4 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாணச் சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,697,121 முத்திரைக் கட்டணமும் ரூபா 1,484,210 நீதிமன்றத் தண்டப் பணமும் பெறப்பட வேண்டியிருந்தது.

**3 செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2005 ஒக்டோபர் 05 ஆந் திகதிய 1413∴15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்டவாறு அங்கத்தவர்களுக்கான படிகளை வழங்கும்போது, அதில் குறிப்பிட்டுள்ளவாறு அல்லது 04 அங்கத்தவர்களுக்கு ரூபா 45,000 வழங்கப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்தவ வினைத்திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**3.2.1 ஊழியர் கடன்**

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ஊழியர்கடன் மீதி ரூபா 11,848,929 ஆகும். இடமாற்றம் பெற்ற, சேவை விலகிய, மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதியாகிய ரூபா 314,037 அதில் உள்ளடங்கியிருந்தது.

எனினும், அக் கடன் நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.2.2 மனிதவள முகாமைத்துவம்**

(i) ஆரம்பப் பிரிவு ஊழியர்கள் 46 பேர்களது மிகை நிலவியபோதும் மேலதிகமாக உள்ள பதவிகளுக்குரியவர்களது பதவியை முறைப்படி அமையுமாறு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) தொழிலாளர் 14 பேருக்கு அவர்களுக்குரிய கடமைகளுக்குப் பதிலாக வேறு கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், இரண்டாம் நிலை, ஆரம்பநிலை ஊழியர்களுக்கு கடமைகள் முறையாக ஒப்படைக்கப்பட்டிருக்கவுமில்லை.

(iii) வருடாந்த இடமாற்றம் அமுலாகாமையால் 17 உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தொடர்ச்சியாக 10 ஆண்டுகளுக்கு அதிகமாகப் பணி புரிந்தவாறிருந்தனர்.

**3.2.3** மோதர வெள்ளவத்த எனும் அரச காணியைச் சபை சுவீகரிக்காது அக் காணியில் ‘‘ஜோவி’’எனும் பெயரிலான சிறுவர்பூங்கா நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

**3.2.4** 2004 யூலை தொடக்கம் 2012 டிசெம்பர் வரையாக காலப்பகுதிக்குரிய மாதிரிப் படிவம் (ii) ஒப்படைக்கப்படுவது தாமதமாகியதால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு ரூபா 163,644 தண்டப்பணமும் 2010 ஆம் ஆண்டிற்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக் கொடுப்பனவு புறக்கணிக்கப்பட்டமையால் 2015 ஏப்ரல் 20 ஆந் திகதியன்று ரூபா 11,953 தண்டப்பணமும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. இது சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 156(1) க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.2.5** சபை அறவீடு செய்திருந்த பெறுமுதிசேர் வரியாகிய ரூபா 842,867 தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியாகிய ரூபா 65,897 முத்திரைத் தீர்வையாகிய ரூபா 46,857 என்பவற்றை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற் மீளாய்வாண்டின்போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

அஹங்கம் குறுந்துவத்தை ஒழுங்கமையில் கொங்கிரீட் இட்டு அதனைத் திருத்தி அமைப்பதற்கு 2015 பெப்ரவரி 26 ஆந் திகதியன்று ரூபா 387,548 மதிப்பீட்டில் முதியோர் சங்கம் ஒன்றுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) உடன்படிக்கையின் 03 ஆம் நிபந்தனைக்கமைய, 2015 பெப்ரவரி 26 தொடக்கம் 03 மாதங்களுக்குள் வேலையை முடித்து அதனை ஒப்படைக்க வேண்டுமாயினும், 2015 நவெம்பர் 17 ஆந் திகதி வரை வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 மார்ச் 03 ஆந் திகதியன்று ரூபா 77,509 முற்பணமாக வழங்கப்பட்டதைத் தவிர, அச் செயற்திட்டத்தை அமுலாக்குவதற்குச் சபை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை.

**3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

2007 சனவரி 01 முதல் 2016 டிசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு ரூபா 90,000 வருடாந்தக் குத்தகையின் அடிப்படையில் தனியாருக்குச் சொந்தமான 09 ஏக்கர் 01 றூட் 20 பர்ச்சஸ் விசாலமான காணியில் சபையால் நடாத்தப்பட்டவாறிருந்த எலுகெட்டிய கொம்போஸ்ட் செயற்திட்டம் பிரதேச வாசிகளது எதிர்ப்பு காரணமாக நிறுத்தப்பட வேண்டியதாயிற்று இச் செயற்திட்டத்திற்குச் சபை செலவழித்த தொகை ரூபா 2,534,364 ஆகும்.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுத் திட்டம்

(அ) நிகழ்ச்சித்திட்ட வாரியாக மீளாய்வாண்டினது மீண்டுவரும் வருவாயையும் செலவினத்தையும் ஒப்பிட்டுப் பாாக்குமிடத்து 05 நிகழ்வ்வித்திட்டங்களில் வருவாயிலும் கூடிய செலவினம் தென்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தின் படி ரூபா 7,435,000 மூலதன வருவாயாகவும் ரூபா 80,800,000 மூலதனச் செலவினமாகவும் மதிப்பிடப்பட்டிருந்தன. எனினும், வருவாயிலும் கூடிய செலவினத்தை எவ்வாறு ஈடு செய்வதென்பதும் செலவு எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும் காட்டியிருக்கவில்லை. உள்ளவாறான மூலதன வருவாய் ரூபா 5,938,228 ஆகவும் உள்ளவாறான மூலதனச் செலவினம் ரூபா 10,550,953 ஆகவும் அமைந்ததால் மூலதன வருவாயை விட மூலதனச் செலவினம் ரூபா 4,612,725 அதிகமாக ஏற்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடங்கிய 07 செலவின விடங்களில் ரூபா 69,090,416 சேமிப்பும் ஏனைய 02 செலவிய விடயங்களில் வரம்பிற்கு அதிகமாக ரூபா 3,270,233 செலவும் 05 செலவின விடயங்களில் இலக்கினை அடைய முடியாத ரூபா 116,382,015 வருவாயும் நிலவியமையால் வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான முகாமைத்துவம் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டமை புலனாகியது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளூராட்சி ஆணையாளரின் (தென் மாகாணம்) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ/லே இலக்கச் சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை. எனினும், சபை உள்ளகக் கணக்காய்விற்கென நியமித்த உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 421,257 சம்பளமும் படியுமாக வழங்கப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(i) ஏற்பாடுகளுக்கமைய மீளாய்வாண்டின்போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

2015 டிசெம்பர் 07 ஆந் திகதியன்று கொம்பொஸ்ட் செயற்திட்டம் நிறுத்தப்பட்டமையால் அச்செயற்திட்டத்திற்குரிய கொம்பொஸ்ட் உரக்கலவை இயந்திரங்கள் 02 மற்றும் கிரஷர் என்பன பாவனையிலிருந்து அகற்றப்பட்டு அஹங்கம உப அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

சபை பயன்படுத்தும் ரூபா 34,872,063 பெறுமதியான 07 வாகனங்களது உரித்தைச் சுவீகரித்துக் கொள்வதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்தப் பொருள் மெய்மையாய்வு

இலங்கை குடியரசின் 756 ஆம் நிதிப்பிரமாணத்தில் உள்ள ஏற்பாட்டின் படி சகல ஆண்டுகளிலும் பொருட் கணிப்பு மேற்கொள்ளப்பட்டு 757(4) ஆம் நிதிப் பிரமாணத்தின் படி அதன் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 தீர்த்து வைக்கப்படாததும் பதில் வழங்கப்படாததுமான கணக்காய்வு ஐய வினாக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலும் முன்னைய 02 ஆண்டுகளிலும் வழங்கப்பட்ட 13 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் வழங்கப்பட்டிராததுடன், அவை தொடர்பாக அனுப்பி வைக்கப்பட்ட ஞாபகமூட்டும் கடிதங்களுக்கும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டினது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 2.2.1 பந்தியின் (இ),(ஏ),(ஐ),(ஒ),(ஓ) மற்றும் (த) பந்திகளின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் மீளாய்வாண்டின் நிதிசார் கூற்றுக்கள் திருத்தஞ் செய்யப்படுவதற்கான இணக்கம் ஏற்பட்டிருந்தபோதும், அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே விபரிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) மனிதவளமுகாமைத்துவம்